Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 37/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | முருகேசன் |
| Father's Name | – | ராமதாஸ் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 13th September 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது மீன்கரை ரோட்டில் குடியிருந்து கொண்டு குரு அஸ்வின் என்ற பெயரில் மீன்கரை ரோட்டில் பாரஸ்ட் அலுவலகத்திற்கு எதிரில் மர இழையகம் வைத்துள்ளேன். கடந்த 2016 ம் வருடம் டிசம்பர் மாதம் தேதி ஞாபகம் இல்லை, கிழக்கில் இருந்து மீன்கரை ரோட்டில் ஒரு இரு சக்கர வாகனம் அதி வேகமாக வந்தது, அப்போது மாலை 6.30 மணியிருக்கும், சுப்பிரமணி என்பவர் சாலையைக் கடப்பதற்காக மேற்படி மீன்கரை ரோட்டின் தென்பகுதியில் நின்றுகொண்டிருந்தார்.

கிழக்கில் இருந்து மேற்கே ஒரு இரு சக்கர வாகனம் அதிவேகமாக வந்து அவர் மீது மோதியதில் அவர் கீழே விழுந்துவிட்டார். மேற்படி வாகனம் கேரளா மாநிலம் KL 70 என்று பதிவு எண் இருந்தது. விபத்தில் அவருக்கு காதில் இருந்து இரத்தம் வந்தது. ஆஜர் எதிரிதான் மேற்படி இரு சக்கர வாகனத்தினை அதிவேகமாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தியவர் ஆவார். பின்னர் காயம்பட்டவரை ஆம்புலன்ஸ் மூலமாக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

பின்னர் அடுத்த நாள் காலை 9 ல் இருந்து 9.30 க்குள் நான் சம்பவம் பற்றி காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்தான் நான் அளித்தது. அந்த புகார் **அசாஆ.1** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மீன்கரைரோட்டில் எனது கடை வடபுறம் உள்ளது என்றால் சரிதான். மீன்கரை ரோட்டில் ரயில்வேபாலம் தாண்டி வரும் பகுதி மேடான பகுதி என்றால் சரிதான், விபத்து நடந்த இடம் மேடான பகுதி அல்ல. நான் கடந்த 25 ஆண்டுகளாக கடை வைத்து நடத்திவருகிறேன். விபத்து நடந்த சமயம் சாலையில் தடுப்பு இருந்ததா என்றால் இல்லை. விபத்து சமயம் ஒரு பகுதியில் சாலை போட்டுக்கொண்டிருந்தார்களா என்றால் இல்லை.

காலை 9 மணியில் இருந்து இரவு 8 மணி வரை நான் வழக்கமாக கடையை திறந்துவைத்திருப்பேன். விபத்தில் இறந்த நபரை எனக்கு முன்னரே தெரியும், அவர் அங்கு சுண்ணாம்பு கால்வாய் லோடிங் வேலையில் இருந்தார். என் கடையில் என்னைத் தவிர என்னுடன் வேலை செய்பவர் இருக்கிறார் என்றால் சரிதான். விபரத்து நேரம் மாலை சுமார் 6.30 மணியிருக்கும் என்றால் சரிதான். அன்றைய தினம் மழை எதுவும் பொழியவில்லை.

விபத்து நடந்தவுடன் விபத்தில் காயம்பட்டவரை நான்தான் 108 அவசர ஊர்தியில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன் என்றால் சரிதான். காயம்பட்டவருடன் நான்

மருத்துவமனை செல்லவில்லை. சம்பவத்திற்குப் பின்னிட்டு 10 நிமிடம் கழித்து போலிசார் சம்பவ இடம் வந்தார்கள் என்றால் சரிதான். போலிசார் வந்தசமயம் என்னிடம் விசாரணை செய்யவில்லை. நான் மருத்துவமனைக்குச் செல்லவில்லை. காயம்பட்டவரின் மகனுக்கு அப்போதே நான் தகவல் கூறிவிட்டேன். மேல்சிகிச்சைக்காக எத்தனை மணிக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள் என்று தெரியாது.

இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தவருக்கு காயம் ஏற்பட்டதா என்றால் அவருக்கு காயம் ஏற்படவில்லை. இரு சக்கர வாகனம் ஓட்டிவந்தவரின் பெயர் விலாசம் எவ்வாறு தெரியும் என்றால் நான் அவரிடமே கேட்டு தெரிந்துகொண்டேன், அவர் பெயர் ரமேஷ், அவரது அப்பா பெயரைச் கூறினாரா என்றால் இல்லை, அவர் கேரளாவைச் சேர்ந்தவர் என்றுமட்டுந்தான் கூறினார், ஊரைப்பற்றி கூறவில்லை.

ஆஜர் எதிரி கேரளாவில் எந்த ஊர் என எனக்குத் தெரியாது. விபத்திற்கு பின்னிட்டு காயம்பட்டவரின் மகன் காவல்நிலையத்தில் புகார் அளித்தாரா என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. நான் புகார் அளிக்குமாறு கூறவில்லை. அங்குள்ள லோடிங்மேனிடம் புகார் கொடுத்தீர்களா என்று கேட்கவில்லை. மறுநாள் காவல்நிலையத்திற்கு என் நண்பரை அழைத்துச் சென்றேன். நான் சொல்லி எனது நண்பர் புகாரினை எழுதினார், சரியென ஒப்புக்கொண்டு நான் கையொப்பம் இட்டேன்.

நான் சொல்லச் சொல்ல புகாரினை எழுதினார். என் கடையின் அருகே டெய்லர் கடை மற்றும் நிறைய கடைகள் உள்ளதா என்றால் சரிதான், அவர்களுக்கும் விபத்து பற்றி தெரியும். புகார் எழுதிய நபர் பெயர் பாண்டியன் அவர் என் கடைக்கு வரும் வாடிக்கையாளர். புகார் கொடுக்க காவல்நிலையம் வந்த பாண்டியன் என்பவர் என் நண்பர் அல்ல என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரினை எழுதியது பாண்டியன் அல்ல என்றால் தவறு, பாண்டியன்தான் எழுதினார். எனக்கு எழுதப் படிக்க தெரியாது.

விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியம் கடை ரோட்டின் வலது புறத்தில் இருந்து அவசரமாக சாலையைக் கடக்கும்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, அவர் மண்ணில் ரோட்டை விட்டு கீழே இறங்கி நின்றுகொண்டுதான் இருந்தார். அவர் தார் சாலையை விட்டு கீழே நின்றுகொண்டிருந்தார் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் இறந்தவர் லோடிங் மேன் என்பதாலும் அந்தப் பகுதியில் வசிப்பவர் என்பதாலும், எனக்கு பழக்கமானவர் என்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் நேரில் பார்த்தேன்.

**மறுவிசாரணை**

**இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 37/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சரவணன் |
| Father's Name | – | ராமசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 13th September 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது குமரன் நகரில் குடியிருந்து கொண்டு லோடிங் மேனாக வேலை பார்த்துவருகிறேன். கடந்த 2016 ம் வருடம் டிசம்பர் மாதம் 14 ந் தேதி , நானும் எனது நண்பர் முருகேசனும் மரம் அறுக்கும் அவரது கடைக்கு முன்பாக மாலை 6.30 மணியளவில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். எங்களுக்கு எதிர் திசையில் சுப்பிரமணியம் நின்றுகொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரி இரு சக்கர வாகனத்தில் மீன்கரை ரோட்டில் வேகமாக வந்து மேற்படி சுப்பிரமணி மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். மேற்படி இருசக்கர வாகனமானது Honda நிறுவன வாகனம் அதன் பதிவு எண் 6869 ஆகும். அது கேரளா வண்டியாகும்

மேற்படி விபத்தில் சுப்பிரமணியத்திற்கு காதில் இருந்து இரத்தம் வந்தது. பின்னர் நான் அவரை பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு உள்நோயாளியாக 2 நாட்கள் சிகிச்சைக்கு பிறகு அவர் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சுண்ணாம்பு கால்வாய் வன அலுவலகத்திற்கு முன்பு லோடிங் மேனாக சுமார் 7, 8 வருடங்களாக வேலை செய்துவருகிறேன். சுப்பிரமணியம் என்னுடன் பணி புரிவதால் அவரை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். ரயில்வே பாலத்தில் இருந்து மீன்கரை வரும் ரோடு சற்று மேடாக இருக்கும் என்றால் சரிதான். நானும் முருகேசனும் மரக்கடையில் பேசிக்கொண்டிருந்தோம் என்றால் சரிதான். எங்களைத் தவிர வேறு யாரும் மரக்கடையில் இல்லை.

நானும் முருகேசனும் மரக்கடைக்கு வெளியே நின்று பேசிக்கொண்டிருந்தோம், விபத்து நடந்ததை நாங்கள் சத்தம் கேட்டுப் பார்த்தோமா என்றால் இல்லை, நேரில் பார்த்தோம். இரு சக்கர வாகனத்தை ஓட்டிவந்தவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. விபத்தில் அடிபட்ட சுப்பிரமணியம் சாலைக்கு எதிர்புறம் மண்ணில் நின்றுகொண்டிருந்தார். விபத்து ஏற்பட்டவுடன் முருகேசன் அவசர ஊர்திக்கு அழைத்து தகவல் கூறினார் என்றால் சரிதான். அதே அவசர ஊர்தியில் நானும் முருகேசனும் அரசு மருத்துவமனைக்குச் சென்றோம். அரசு மருத்துவமனைக்கு போலிசார் வரவில்லை.

விபத்து நடந்த சமயம் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்த விபரம் எனக்கு தெரியாது. மீன்கரை ரோட்டிற்கு நடுவே தடுப்பணை விபத்து நடந்த சமயம் கட்டவில்லை, சம்பவ சமயத்தில் ஒரு பகுதியில் ரோடு போட்டார்களா என்றால் இல்லை. விபத்தில்

அடிப்பட்டவரின் மகன் விபத்து நடந்த சமயம் ஊரில் இல்லை. சம்பவத்தன்று சுப்பிரமணி மகன் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு வரவில்லை, அவரது மனைவி மருத்துவமனைக்கு வந்தார். சம்பவத்திற்கு மறுநாள் போலிசார் சம்பவ இடம் வந்தனர். அசா.1 உடன் நான் காவல்நிலையம் செல்லவில்லை.

விபத்தில் இறந்துபோன சுப்பிரமணியம் கடை ரோட்டின் வலது புறத்தில் இருந்து அவசரமாக சாலையைக் கடக்கும்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, அவர் மண்ணில் ரோட்டை விட்டு கீழே இறங்கி நின்றுகொண்டுதான் இருந்தார். அவர் தார் சாலையை விட்டு கீழே நின்றுகொண்டிருந்தார் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் இறந்தவர் லோடிங் மேன் என்பதாலும் அந்தப் பகுதியில் வசிப்பவர் என்பதாலும், எனக்கு பழக்கமானவர் என்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் நேரில் பார்த்தேன். விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல, காயம்பட்டவர் என் நண்பர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 37/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | கார்த்தி |
| Father's Name | – | சுப்பிரமணி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 13th September 2023.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது குமரன் நகரில் குடியிருந்து கொண்டு லோடிங் மேனாக வேலை பார்த்துவருகிறேன். எனது அப்பா பெயர் சுப்பிரமணி. அவர் சாலை விபத்தில் இறந்துவிட்டார். கடந்த 2016 ம் வருடம் டிசம்பர் மாதம் 14 ந் தேதி மாலை 6.45 மணியளவில் என் தந்தையின் மீது இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்படுத்தியதாக அலைபேசியில் எனக்கு தகவல் வந்தது. தகவலை அடுத்து நான் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்குச் சென்றேன். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு உள்நோயாளியாக 3 நாட்கள் சிகிச்சைக்கு பிறகு என் தந்தையார் இறந்துவிட்டார். என் தந்தையார் சடலத்தின் மீது போலிசார் பிரேத விசாரணை மேற்கொண்டபோது நான் உடன் இருந்து சாட்சியாக கையொப்பம் இட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam.,B.A.,B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.